மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், காங்கயம்

<u>அசல் வழக்கு எண்.EP 16/2020, OS No.180/2005</u>

2026ம் ஆண்டு பிப்ரவரி 13ம் நாள் வெள்ளிக்கிழமை வாதி/பிரதிவாதி தரப்பு சாட்சியின் வாக்குமூலம் 1969ம் ஆண்டு சட்டத்தின் ஏற்பாட்டின்படி திருமதி.கே.எஸ்.மாலதி, பி.ஏ., பி.எல்., மாவட்ட உரிமையியல் நீதிபதி, காங்கயம் அவர்களால் ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | பழனிச்சாமி | தொழில் | |
| த/பெ | | ஊர் | |
| வயது | | தாலூக்கா | காங்கேயம் |
| மதம் | இந்து | மாவட்டம் | திருப்பூர் |

<u>13.02.2026 ம.சா.1 ஆஜர் சத்தியப்பிரமாணம் செய்துவைக்கப்பட்டு எதிர்மனுதாரர்கள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>

1. நான் தாக்கல் செய்திருந்த அசல் வழக்கில் சர்வேயரை அழைத்துச் சென்று எனது சொத்துக்களை அளவீடு செய்தேன் என்றால் ஆமாம். சர்வேயர் அளவீடு செய்ததன் அடிப்படையில் எனது சொத்தானது குறிப்பிட்ட அளவுகளுக்குள் உள்ளதாக சொல்லி அசல் வழக்கில் தீர்ப்புரை பிறப்பிக்கப்பட்டது என்றால் ஆமாம். கிழபுறம் 17.2 மீட்டர் அளவுகளுக்குள் உட்பட்ட இடத்தை எந்த தேதியில் என்னை எதிர் மனுதாரர்கள் அனுபவம் செய்யவிடாமல் தடுத்தார்கள் என்றால் தேதி தெரியாது ரொம்ப நாள் ஆனதால் நினைவில்லை.

2. நான் தாக்கல் செய்துள்ள இந்த நடவடிக்கை மனுவில் எதிர்மனுதாரர்கள் என்னை எந்த தேதியில் இடையூறு செய்தார்கள் என்று நான் தேதி எதுவும் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால்

என்னை இடையூறு செய்து கொண்டே இருக்கிறார்கள் அதனால் தேதி சொல்ல முடியாது. அசல் வழக்கில் ஏற்பட்ட தீர்ப்பாணைக்கு எதிராக நான் காங்கேயம், சார்பு நீதிமன்றத்தில் மேல் முறையீடு தாக்கல் செய்தேன் என்றால் ஆமாம். மேல்முறையீட்டில் எனக்கு சாதகமாக தீர்ப்பு வராமல் தள்ளுபடி செய்யப்பட்டு விட்டது என்றால் ஆமாம்.

3. என்னை எதிர்மனுதாரர்கள் அனுபவம் செய்ய விடாமல் இடையூறு செய்கிறார்கள் என்பதைப் பொறுத்து இந்த மனுவில் நான் ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் கம்பி வேலி போட்டார்கள் அதை நான் எடுத்தேன் திரும்பவும் பெரிதாக போட்டுக் கொண்டார்கள். உயர்நீதிமன்றத்தில் உத்தரவு பெற்று கம்பி வேலியை எடுத்தேன். உயர் நீதிமன்றத்தில் உத்தரவு பெற்று வேலியை எனக்கு எடுத்துக் கொடுத்தார்கள் என்பதை பொறுத்து நான் இந்த மனுவில் ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் ஆமாம்.

4. எனது சொத்தின் காலை எண்.153. நான் தாக்கல் செய்துள்ள ம.சா.ஆ.3 ஆவணத்தில் நத்தம் புறம்போக்கு எண் 471 என கண்டுள்ளது என்றால் எனது சொத்தின் காலை எண் 153 நான் தாக்கல் செய்துள்ள ம.சா.ஆ.3 ஆவணத்திற்கும், இந்த வழக்கு சொத்திற்கும் நான் கேட்டுள்ள பரிகாரத்திற்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்று சொன்னால் சரியல்ல.நான் தாக்கல் செய்துள்ள ம.சா.ஆ.4 புகார் ரசீது சம்பந்தமாக ஒப்புகை ரசீது தாக்கல் செய்யப்படவில்லை என்றால் சரியல்ல தாக்கல் செய்துள்ளேன். ம.சா.ஆ.4 புகார் மனுவில் தேதி குறிப்பிடப்படவில்லை என்றால் ஆமாம்

ரொம்ப நாள் ஆனதால் தேதி எனக்கு ஞாபகம் இல்லை. இந்த தேதியில் தான் நான் மனு கொடுத்ததாக ம.சா.ஆ.5 ஆவணத்தில் குறிப்பிட்டு எதுவும் சொல்லப்படவில்லை என்றால் சரியல்ல.

5. நான் தாக்கல் செய்துள்ள ம.சா.ஆ.4 மற்றும் ம.சா.ஆ.5 ஆவணங்களுக்கிடையே எந்த ஒரு சம்பந்தமும் இல்லை என்று சொன்னால் சரியல்ல. ம.சா.ஆ.3 முதல் ம.சா.ஆ.5 வரையிலான ஆவணங்கள் என்னால் இந்த வழக்கத்திற்காக தயார் செய்யப்பட்ட ஆவணங்கள் என்றும் மேற்படி ஆவணங்களுக்கும் இந்த வளத்திற்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றும் சொன்னால் சரியல்ல. மனுசொத்தை பொறுத்தவரை இந்த வழக்கின் எதிர்மனுதாரர்கள் அசல் வழக்கில் இந்நீதிமன்றம் வழங்கிய தீர்ப்புரைக்கு எதிராக எப்போதும் நடக்கவில்லை என்றும் என்னை எந்த இடையூறும் செய்யவில்லை என்றும் சொன்னால் சரியல்ல. இந்த மனுவை நான் வேண்டுமென்றே எதிர்மனுதாரர்களை நீதிமன்றத்திற்கு இழுத்தடிப்பதற்காக நான் தாக்கல் செய்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல.

6. நாளது தேதி வரை கம்பி வேலி உள்ளதா என்றால் உயர்நீதிமன்ற உத்தரவின் அடிப்படையில் கம்பி வேலியை எடுத்து விட்டார்கள். நான் சொல்வது போல் எந்த காலத்திலும் எதிர்மனுதாரர்கள் எனது சொத்தை ஆக்கிரமிப்பு செய்து கம்பிவேலி எதுவும் போடவும் இல்லை அதை நான் உயர் நீதிமன்ற உத்தரவு பெற்று அகற்றவும் இல்லை என்று சொன்னால் சரியல்ல. கம்பி வேலி போட்டு எனது இடத்தை எதிர் மனுதாரர்கள் ஆக்கிரமிப்பு செய்துள்ளார்கள் என்பதை பொறுத்து நான்

நீதிமன்ற ஆணையர் நியமனம் பெற்று அழைத்துச் சென்று அதை காண்பிக்கவில்லை என்று சொன்னால் சரியல்ல நான் தாக்கல் செய்துள்ள இந்த மனு நிலைக்கத்தக்கது அல்ல என்றும், எதிர்மனுதாரர்களின் செலவு தொகையோடு இந்த மனு தள்ளுபடி தக்கது என்றும் சொன்னால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியால் சரிபார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கைரேகை செய்தும்/கையொப்பம் செய்தும் ஒப்புக்கொள்ளப்படுகிறது.

K S MALATHI

Digitally signed by K S MALATHI
Date: 2026.02.13 19:06:16 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி, காங்கயம்